Under the National Water Supply and Sanitary (Rural) Programme no new schemes were taken up from 1st April 1961 and only incomplete works were taken up and completed. So the materials purchased before could not be utilised fully as anticipated.

(c) Instructions were issued to the Chief Engineer (Highways and Rural Works) to dispose of the materials to the Panchayat Unions according to their requirements and collect the cost from them. The Chief Engineer has also been instructed to transfer the materials to the Public Health Engineering Department for meeting their needs and to dispose of the balance, if any, in public auction.

Illumination of the Krishnagiri Reservoir

* 301 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the plans to illuminate the Krishnagiri Reservoir?

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திற்கு அலங்கார விளக்குகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திற்கு அலங்கார விளக்குகள் அமைப்பதற்கான திட்ட விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கிருஷ்ணகிரி அணை, பூங்கா இவற்றை விளக்குகளால் அலங்கரிப்பதற்காக திட்டம் ஒன்றை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அனுப்பியுள்ளார். இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் 5 லட்ச ரூபாயாகும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Dam across Kamandala Naga River

* 302 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any survey was carried out in Amirthi, Vellore taluk, North Arcot district for the construction of a dam across Kamandala Naga River; and

(b) if so, the present stage thereof?

கமண்டல நாக நதியின் குறுக்கே அணை

திரு. எல். பலராமன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம் கமண்டல நாக நதியின் குறுக்கே அமர்த்தி என்னுமிடத்தில் அணை கட்ட சர்வே செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் நிலை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதை எப்போது எடுத்துக் கொள்ள அரசு உத்தேசித்திருக்கிறது, இதற்கான அங்கீகாரத்தை அரசு வழங்கியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல, ஸ்தல அதிகாரிகளின் பரிசீலனையில் இருக்கிறது. இத்திட்டத்திற்கான செலவு ரூ. 55 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் கிட்டத்தட்ட 22,500 ஏக்கராவிற்கு நிலையான பாசன வசதி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

Ambar Charkas

*** 303 *Q.*—THIRU V. ISVARMURTI :** Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of Ambar Charkas used by the Khadi Department to give employment in the rural areas as on date; and

(*b*) the total expenditure incurred for implementing the Scheme?

அம்பர் ராட்டைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பளிப்பதற்காக கதர்த் துறையால் நாளதுவரை பயன்படுத்தப்படும் அம்பர் ராட்டைகள் எத்தனை?

(இ) இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆன செலவு எவ்வளவு?